இந்து தமிழ் திசை – 2022/07/29

இளைஞர்களின் நலனை கருத்தில் கொண்டு

# தேசிய கல்விக் கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளது

● உத்தரபிரதேச ஆளுநர் ஆனந்திபென் படேல் கருத்து

■ கோவை

நாட்டின் எதிர்கால வளர்ச்சி மற்றும் இளைஞர்களின் நலனை கருத்தில் கொண்டு தேசிய கல்விக்கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளதாக உத்தர பிரதேச மாநில ஆளுநர் ஆனந்திபென் படேல் தெரிவித்தார்.

கோவை அவிநாசிலிங்கம் மகளிர் உயர்கல்வி நிலையத்தில் தேசிய தர மதிப்பீட்டுக்கு ஏற்ப தரத்தை மேம்படுத்திக்கொள்வது குறித்த ஒருநாள் தேசிய கருத்தரங்கு நேற்று நடந்தது. அவிநாசி லிங்கம் கல்வி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் மீனாட்சிசுந்தரம் தலைமை வகித்தார். வேந்தர் தியாக ராஜன், துணைவேந்தர் பாரதி ஹரிசங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

உத்தரபிரதேச மாநில ஆளுநர் ஆனந்திபென் படேல் கருத்தரங்கு மலரை வெளியிட்டு பேசியதாவது:



▲ அவிநாசிலிங்கம் மகளிர் உயர்கல்வி நிலையத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பங்கேற்ற உத்தரபிரதேச மாநில ஆளுநர் ஆனந்திபென் படேல் கல்வியில் சிறந்து விளங்கிய மாணவிகள் மற்றும் சாதனைகள் படைத்த ஆசிரியைகளுக்கு சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.

படம்: ஜெ.மனோகரன்

ஒரு நாட்டின் மொத்த வளர்ச்சி என்பது கல்வி கட்டமைப்பை பொருத்து தான் நிர்ணயிக்கப்படும். கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கு தேசிய தர மதிப்பீட்டு குழு (நாக்) போன்ற அமைப்பு மிக முக்கியம். தரச் சான்று பெறுவதற்கான வழிமுறைகளை அனைத்து கல்வி நிறுவனங்களும் பின்பற்றி தரமதிப்பீட்டு சான்று பெற வேண்டும். நான் உத்தரபிரதேச மாநிலத்தின் ஆளுநராக பதவியேற்றபோது ஒரு பல்கலைக்கழகம் கூட தேசிய தர மதிப்பீட்டு கவுன்சிலின் சான்று பெற வில்லை. தொடர்ந்து சிறப்பு கூட்டங்கள் நடத்தினேன். நாட்டின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களை வரவழைத்து பயிலரங்கு பல நடத்தினேன். இதன் காரணமாக இன்று இரண்டு பல்கலைக்கழகங்கள் நாக் தர மதிப்பீட்டு கவுன்சிலின் ஏ தரச்சான்று பெற்றுள்ளன.

புதிய கல்விக் கொள்கை எதிர்கால வளர்ச்சியையும் இளைஞர்களின் நலனையும் கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த கல்விக் கொள்கையை அமல்படுத்துவதால் மாணவ, மாணவிகளின் திறன் நம் நாட்டின் தேவைக்கு ஏற்ப மேம்படுத்தப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து, கல்வியில் சிறந்து விளங்கிய மாணவிகள் மற்றும் சாதனைகள் படைத்த ஆசிரியைகளுக்கு ஆளுநர் சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.